
உ
சிவமயம்

# நினைவு மலர்



## திருமதி. இரத்தினாம்பிகை அருணாசலம்

அவர்கள் சிவபதம் எய்திய 31.ஆம் நாள்

## நினைவு மலர்

21.10.2001

# திருமதி இரத்தினாம்பிகை அருணாசலம்



**பிறப்பு: 11.01.1932** **இறப்பு: 21.09.2001**

அருந்ததி நேர் இரத்தினாஅம்பிகைப் பொன் வானோர்
விருந்தேற்று விண்ணூர்க்கே விரைந்தாள் பெருந்தாரம்
புரட்டாதித் திங்கள் பூர்வ பக்கப் பஞ்சமி நாள்
அரன் தேர் நன் நாளென்று அறிந்து.



## சமர்ப்பணம்

எமது அன்புத் தெய்வத்தின்
திருப்பாதங்களுக்கு
இந்நூல் சமர்ப்பணம்
மனிதருள் மாணிக்கமாய் அன்பு
நிறைந்த பேரொளியாய்
இன்சொல் பேசி, அன்புடன்
எம்மைப் பேணிக்காத்து,
பண்புடனும், பாசத்துடனும்,
நேசத்துடனும் இன்முகத்துடன்
வாழ்வாங்கு வாழ்ந்து இன்று
வானுறையும் தெய்வமாகிவிட்ட
எமது அன்புத் தாயின்
திருப்பாதங்களிற்கு
இம்மலரினைக்
காணிக்கையாக்குகின்றோம்.

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

# வாழ்க்கை வரலாறு

ஈழவள நாட்டின் வதனமாய் விளங்கும் யாழ்ப்பாணத்தின் மேற்பால் அமைந்திருக்கும் வளமிகு வட்டுக்கோட்டையில் சைவவேளாண் உயர்குலத் திலகர் பிரபு இராசவல்லப முதலியார் வழித்தோன்றிய பெருமைனார், சின்னத்தம்பர், சிவகுருநாதர் தாமோதரம் பிள்ளையும் நாகம்மாவும் ஆற்றிய இல்லறத்தின் நன்கலங்களில் முதல்வராகிய நீலாயதாட்ஷி அம்மாவும் தொடர்ந்து உயர்திரு சிவகுருநாதர் (முன்னாள் புகையிரத நிலைய அதிபரும், வட்டுக்கோட்டை கிராமசபைத் தலைவரும்), பெருமையினார் (மலேசியா), கமலாய தாட்ஷி அம்மா Dr. பூலோகசுந்தரம் (LIM MADRAS முன்னாள் ஆயுள் வேதக் கல்லூரி விரிவுரையாளர்), நவரத்தினராசா (முன்னாள் கமநல விதானை, அனுராதபுரம்) என்னும் ஐவரைப் பெற்று அகம் மகிழ்ந்தனர்.

திரு. தாமோதரம்பிள்ளை தமது மைத்துனர் தினநாய்க முதலியார் வழித்தோன்றிய உயர்திரு. அருணாசலம் முத்துவேலு (தொழிநுட்பவியலாளர், புகையிரத இலாகா, மலேசியா) அவர்களுக்கு தமது சிரேஷ்ட புத்திரி நீலாயதாட்ஷி அம்மாவை 1914இல் மாங்கல்ய தாரணம் செய்து வைத்தார். இவர் கணவனுடன் மலேசியா சென்று இல்லறம் நடாத்தினார்.

"மங்களம் என்பது மனைமாட்சி, மற்றதன்
நன்கலம் நன்மக்கட் பேறு"

என்ற திருவள்ளுவரின் திருவாய் மொழிக்கிணங்க நகுலாம்பிகை, ஞானாம்பிகை, கனகாம்பிகை, கமலாம்பிகை, இரத்தினாம்பிகை என்னும் ஐந்து செல்வ மகளிரையும் பெற்ற பின்னர் தாம் செய்த தவத்தின் சிறப்பாக தவம் என்னும் சண்முகநாதன் அவர்களையும் பெற்று ஆனந்தம் அடைந்தனர்.

திருமதி நகுலாம்பிகை காலஞ்சென்ற சுப்பிரமணியம் ஆறுமுகம் (பொறியியலாளர், மலேசியா) அவர்களையும் திருமதி ஞானாம்பிகை திரு. நாகலிங்கம் நாகேந்திரம் (B.F.O, Forest Dept., Ampara) அவர்களையும் திருமதி கமலாம்பிகை மலேசியாவிலிருந்து வந்த திரு. பொன்னம்பலம் நவரத்தினம் (முகாமையாளர், சினிமாஸ் லிமிட்டட்) அவர்களையும், திரு. சண்முகநாதன் (Ex. Writ Officer) தமது இளைய மாமனாரின் மகள் இராசலட்சுமி அவர்களையும் மணம் புரிந்தனர்.

இரத்தினாம்பிகை அவர்கள் 1932ம் ஆண்டு தைமாதம் 11ம் நாள் ஞாயிற்றுக்கிழமை பூர்வபட்ச திருதியையில் அவிட்ட நட்சத்திரத்தில் இவ்வுலகில் அவதரித்தார்.

"விளையும் பயிரை முளையிலே தெரியும்" எனும் முதுமொழிக் கிணங்க அன்பும், பண்பும், அறிவும், அடக்கமும் இளமையிலேயே பெற்றிருந்தார். கல்வியில் மிக்க ஆர்வமுள்ளவராக விளங்கிய இவர் தனது ஆரம்பக் கல்வியை வட்டு அமெரிக்கன் மிஷன் த.க.பாடசாலையில் ஆரம்பித்தார். மலேசியாவிலிருந்து திரும்பிய தந்தையார் சைவமும் தமிழும் சிறப்புறக் கற்க வேண்டுமென விருப்பம் கொண்டு, அவ்வேளையில் சைவப் பாடசாலையாக விளங்கிய வட்டு மத்திய கல்லூரியில் கல்வியைத் தொடர்வித்தார். பின்னர் ஆங்கிலக் கல்வியைக் கற்பதற்காக வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் இணைந்தார் S.S.C பரீட்சையில் சிறப்புத் தேர்ச்சி பெற்றதும். பொன்னாலை வரதராஜப் பெருமாள் வித்தியாலயத்தில் 1950ம் ஆண்டு தை மாதம் 05ம் நாள் ஆங்கில உதவி ஆசிரியராக நியமனம் பெற்றார். ஆசிரியப் பணியில் வல்லவராகவும் ஆர்வமிக்கவராகவும் இருந்தமையினால் பல சிறந்த மாணாக்கரை உருவாக்கினார். இவர் தனது சேவையினை பல வருடங்களாக வட்டு. சுப்பிரமணிய வித்தியாலயத் திலும், சங்கரத்தை சின்னம்மா வித்தியாசாலை, பிளவத்தை அமெரிக்கன் மிஷன் த.க.பாடசாலையிலும் இறுதியாக வட்டு மத்திய கல்லூரியிலும் பலரும் போற்ற சிறப்புறச் செய்தார்.

தனது குருத்துவத் தொழிலே தெய்வம் என வாழ்ந்த இவரை இவரது சகோதரர்களான கமலாம்பிகை அவர்களும், சண்முக நாதன் அவர்களும் சேர்ந்து இல்வாழ்வுக்குள் இணைத்தனர். 1961ம் ஆண்டு மே மாதம் அளவையூர் வேலுப்பிள்ளை அன்னப்பிள்ளை தம்பதியினரின் மூன்றாவது புதல்வன் குணத்தின் குன்றாகவும் பண்பின் இருப்பிடமாகவும் அமைதியின் உறைவிடமாகவும் திகழ்ந்த அருணாசலம் (முன்னாள் லிகிதர், பதிவுதாரர் திணைக்களம், கொழும்பு) அவர்களை மணமுடித்து வைத்தனர். இதன் மூலம் அமரர் சின்னத்துரை, அமரர் நாகம்மா அமரர் சரஸ்வதி ஆகியோரை மைத்துனராகப் பெற்றார்.

நற்குணமுள்ள கணவனும் சிறந்த இல்வாழ்வும் கிடைத்தாலும் இரண்டு ஆண்டுகளாகப் புத்திரபாக்கியம் கிடைக்கவில்லை எனப் பெருந்துயர் கொண்டு பல கோவில்களில் வேண்டுதல் செய்தனர். இவர்கள் வேண்டுதலுக்கு கருணை கொண்ட இறைவன் பத்மாஸனி, பராபரி, கணானந்தன், மயூரன் ஆகிய செல்வங்களைக் கொடுத்து பேருவகை அடையச் செய்தார்.

சீரும் சிறப்பும் பெற்ற இக்குடும்பத்தின் மகிழ்ச்சி சில காலங்களே நீடித்தது. இளைய மைந்தன் பிறந்து 1 1/2 ஆண்டுகளில் திடீரென ஏற்பட்ட நோயால் கணவரை இழந்து ஆறாத்துயர் கொண்டார். குதூகலமும் சிறப்பும் பெற்ற குடும்பம் சோபை இழந்தது. எனினும் கணவனால் தனக்கு இட்டுச் செல்லப்பட்ட பொறுப்பு பிள்ளைகளைச் சிறப்பாக வளர்க்க வேண்டுமென்ற வேண்டுகோளே. இதனை சிரமேற்கொண்டு தொடர்ந்தார். அந்நேரத்தில் இவரது இளமை விதவைக் கோலம் பலரது மனத்தையும் உருக்கியது. எதையும் பொருட் படுத்தாது தனது பிள்ளைகளுக்காகவே பதிவிரதையாய் தியாக வாழ்வை மேற்கொண்டார்.

மூத்த மகள் பத்மாஸனிக்கு உமா எனச் செல்லப் பெயரிட்டார். இவரை யாழ்ப்பாணக் கல்லூரியில் உயர்தரம் வரை கற்பித்தார். அவர் நூல்களில் கொண்ட ஆர்வத்தினால் நூலகக் கல்வியில் முதல் நிலைப் பரீட்சையில் சிறப்புச் சித்தியெய்தி வட்டு. யாழ்ப்பாணக் கல்லூரி நூலகத்தில் நிரந்தர நியமனம் பெற்றார்.

இரண்டாவது மகள் பராபரியும் வட்டு. யாழ்ப்பாணக் கல்லூரியில் கற்று உயர்தரப் பரீட்சையில் திறமைச் சித்தியெய்தினார். இவர் சமய, தமிழ் அறிவில் சிறந்து விளங்கியமையினால் கலைமாணிப் பட்டப்பின் படிப்பைத் தொடர்வித்தார். இந்நேரத்தில் தாயாரின் உடல்நிலை, நாட்டு நிலைமை, ஆற்றாமையை ஏற்படுத்த கால,நேரமும் கை கூடி வந்து இவரை இல்லற வாழ்வில் இணைத்தது. தாயாரின் வேண்டுதலை ஏற்று சுழிபுரம் மேற்கைச் சேர்ந்த சுந்தரம் பிள்ளை முருகேசு தம்பதியரின் 02வது புதல்வன் சுந்தரவதனமும் பண்புமிக்க சுந்தரமூர்த்தி அவர்களைக் கரம்பற்றினார். இதன் பயனாக அருண், இராகுலன், பிரணவி எனும் பேரச் செல்வங் களையும் பெற்று பேருவகை அடையச் செய்தார்.

மகன் கணானந்தன் அவர்களும் வட்டு யாழ்ப்பாணக் கல்லூரியில் உயர்தரக் கல்வி கற்று யாழ். கல்லூரி தொழிநுட்பக் கல்லூரியில் படவரைபியல் கற்கை நெறியைக் கற்றுக் கொண்டிருந்த வேளை நாட்டு நிலை சீரற்றுப் போனதாலும் இக்குடும்பம் மீது கொண்ட அன்பின் காரணமாகவும் திரு. சுந்தரமூர்த்தி அவர்கள் இவரை பிரான்ஸ் தேசத்திற்கு அழைத்தார்.

தனது மகனின் மணவாளக் கோலம் காண விரும்பிய அன்னையார் 2000ம் ஆண்டு யூன் மாதம் 23ம் திகதி சித்தங் கேணியைச் சேர்ந்த திரு. சதாசிவம் கார்த்திகேசு (இளைப்பாறிய லிகிதர், சங்கானை உதவி அரசாங்க அதிபர் பிரிவு) தம்பதியரின்

கனிஷ்ட புதல்வி இசைக்கலைமணி சிவகௌரியை இந்தியா சென்று மணம் செய்து வைத்தார்.

இளைய வாரிசு மயூரனையும் உயர்தரம் வரை வட்டு யாழ்ப்பாணக் கல்லூரியில் கற்பித்து சித்தியெய்தியதும் கொக்குவில் தொழிநுட்பக் கல்லூரியில் கணக்கியல் கல்வி (N.C.A.T) கற்பித்தார்.

இவ்வேளையில் நாட்டின் சுமுகமற்ற சூழ்நிலையால் வீட்டை விட்டு இடம் பெயர்ந்து கிளிநொச்சி, மல்லாவி, வவுனியா போன்ற இடங்களில் வாழ்ந்து சொல்லொணாத் துயரங்களை அனுபவித்து தனது பிள்ளையின் பாதுகாப்பு கருதி மற்றைய பிள்ளைகளுடன் பிரான்ஸ் தேசத்திற்கு அனுப்பி வைத்தார். சிறு வயதிலிருந்தே அன்னையின் முழு அன்பையும் பெற்ற இவர் பிரிந்து செல்ல மனமின்றி தவிக்க, தானும் வந்து விரைவில் உங்களுடன் வாழ்வேன் என ஆறுதல் கூறி வழி அனுப்பி வைத்தார்.

இவர்களது குடும்பம் ஒன்று கூடி மகிழ்வது காலதேவனுக்குப் பொறுக்கவில்லை போலும். 2001ம் ஆண்டு ஜனவரி மாதம் 06ம் நாள் நோயினால் பீடிக்கப்பட்டுப் பெரும் வேதனைகளை அனுபவித்தார். இறுதி ஐந்து மாதங்களையும் மயக்க நிலையிலேயே கழித்த இவர் 2001ம் ஆண்டு புரட்டாதி மாதம் 21ம் நாள் வெள்ளிக்கிழமை பின்னிரவு 4.30 மணியளவில் பூர்வபட்ச பஞ்சமி திதியில் சிவபதம் அடைந்தார்.

*ஓம் சாந்தி ! சாந்தி ! சாந்தி !*



திரு. திருமதி அருணாசலம்

# அம்மா

எங்கும் நிறைந்த எல்லாம் வல்ல இறைவன் தமது ஏகப்பிரதிநிதி யாகவே அன்னையைப் படைத்தான் என்னும் ஐதீகத்தை உறுதி செய்தீர்கள்.

அன்பு நிறைந்த அன்னையாய் அரவணைத்தீர்கள். அறிவுமிகுந்த ஆசிரியையாக அறிவுறுத்தினீர்கள். நட்புச் செறிந்த தோழியால் எம்மை வழிப்படுத்தினீர்கள்.

பாரினில் நாம் வாழப் படாதபாடு பட்டீர்கள் எமக்கு வளம் சேர்க்க நீங்கள் உளமார உழைத்தீர்கள் நாம் குற்றம் செய்தாலும் குறையாக நடந்தாலும் முறையாக எடுத்துக்காட்டும் உங்கள் உயர்ந்த குணம் யாருக்கம்மா வரும்?

சுகமாக நாம் வாழ நீங்கள் துயர் எல்லாம் ஏற்றினீர்கள். நலமாக நாமிருக்க உங்கள் பலமெல்லாம் இழந்தீர்கள். உங்கள் தியாகத்தை வருணிக்க எம்மிடம் வார்த்தையே இல்லை.

எமது வழி செம்மையுற நீங்கள் முள்ளிலே கால் பதித்தீர்கள். அதற்காக முகம் சுழித்ததில்லை. எமக்கு ஒளி தருவதற்காக உங்களையே உருக்கிய மெழுகுவர்த்தி நீங்கள்.

அந்த இணையில்லா ஒளிவிளக்கு அணைந்த போதுதான் கரை புரண்டோடும் எங்கள் கண்ணீர் வெள்ளத்தைக் கட்டுப்படுத்த முடியாது கதறுகிறோம், வழி தெரியாது பதறுகிறோம்.

என்றாலும் இந்த மரணம் எங்கள் மன உறவைப் பிரிக்காது! உளஉணர்வை முறிக்காது! உங்கள் வரலாற்று வழியே எங்கள் வாழ்வின் ஒளி! இரத்தத்தைப் பாலாக ஊட்டிவளர்த்த தெய்வமே! எங்கள் கண்ணீரை இன்று காணிக்கையாக்குகிறோம்.

*எம்மைக் கருவாகச் சுமந்தீர்கள்*

*எமக்கென உருவையும் தந்தீர்கள்*

*எமக்காக எருவாக சமைந்தீர்கள்!*

***பிள்ளைகள்.***

# ஊரைக் கூட்டியது உங்களின் இறப்பு

அன்று கரும்பலகை தொட்டெழுதிய கைகள்
காலனின் கட்டளைக்கு கைகட்ட
இன்று ஊரைக் கூட்டியது
உங்களின் இறப்பு

ஊரில் ஒரு ஆசிரியராய்
வீட்டில் ஒரு நற்தாயாய்
வேர் விட்டு நீர் விழுது பரப்பி
பேரில் 'இரத்தினமாய்' மின்ன வைத்தீர்
உம் மாணவரை, பிள்ளைகளை

அன்று அவகாசம் தந்த காலம்
தன் சகவாசம் முடித்துக் கொள்ள
ஊரைக் கூட்டியது
உங்களின் இறப்பு.

தமக்குள் ஒளிதந்து
தனக்குள் அணைந்து கொண்ட
பெரியதோர் விளக்கிற்காய்
அழுது கொண்டது பெரிய சுற்றம்.

கண்ணீரில் கொஞ்சம்
கனவோடு கொஞ்சம்
பகிர்ந்து கொண்டன பழைய நினைவுகள்
இமைகள் வரைவந்து இறங்காமல்
இதயத்தை நெருடி
கனவு வரை தொடர்ந்தது
கண்ணீரின் பாரம்.

அம்மா! அம்மம்மா! இரத்தம்மா!
உமக்காய் அழுது இனி என்ன பயன்?
பேர் பெற்ற ஆசிரியை
பெருந்தாய், பேத்தி என நீர்
அகலக்கால் பரப்பிச் சென்றதன் பின்
அழுது இனி என்ன பயன்?
உங்கள் ஆத்மா சாந்தி பெற
அந்த ஆண்டவனை வேண்டாமல்.

உங்கள் ஆத்மா சாந்திபெற
ஆண்டவனை வேண்டும்
பேரப்பிள்ளைகள்

# கடமை உணர்வு மிக்கவர்

திருமதி இரத்தினாம்பிகை அவர்கள் வட்டுக்கோட்டை கிராமத்தில் தனது இளமைக்காலம் தொடக்கம் வாழ்ந்து கல்வியில் சிறந்து விளங்கி ஆங்கில ஆசிரியையாக தனது கிராமத்தின் பல பாகங்களிலும் கடமையாற்றி தான் ஆரம்பக் கல்வியைப் பெற்ற பாடசாலையில் தனது சேவையின் இறுதிக் காலத்தில் சேவையாற்றினார். வட்டு மத்திய கல்லூரியில் சேவையாற்றிய காலத்தில் மாணவர்கள் ஆங்கில பாடத்தில் பல சாதனைகளைப் படைப்பதற்கு முன்னின்று உழைத்தார். பாடசாலையின் வளர்ச்சிக்கு வேண்டிய எல்லாக் காரியங்களிலும் தன்னால் ஆனமட்டும் ஒத்துழைப்பு வழங்கினார்.

இவரின் அருமைப் புத்திரர்கள் எமது சங்கத்தின் அங்கத்தவர்களாக இருந்து பல சமய, சமூகப் பணிகளில் முன்னின்று உழைத்து சங்க வளர்ச்சிக்கு அரும்பாடுபட்டனர். அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது சங்கத்தின் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இந்து வாலிபர் சங்கம்,
வட்டுக்கோட்டை.

# இரங்கற் செய்தி.


திருமதி. இரத்தினாம்பிகை அருணாசலம் அவர்கள் செப்டெம்பர் மாதம் 22-ம் திகதி இவ்வுலக வாழ்வினை நீத்தார் என்று அறிந்து மிகவும் வேதனைப்பட்டேன்.

திருமதி. இரத்தினாம்பிகை அருணாசலம் அவர்களை நான் பள்ளி மாணவனாக இருந்த காலத்தில் இருந்து அறிவேன். இரத்தினா ரீச்சர், சத்தியபாமா ரீச்சர் மற்றும் மிஸ். வில்லியம்ஸ், மிஸ். சோம சுந்தரம், மிஸ் சீவரத்தினம் ஆகியோர் யாழ்பாணக் கல்லூரியில் கற்று அரங்கேறி வட்டுக்கோட்டைப் பகுதியில் இருந்த தமிழ்ப் பள்ளிகளில் ஆங்கில ஆசிரியைகளாகப் பணியாற்றி வந்தனர். இவர்களிற் சிலர் செல்வி. சோமசுந்தரத்துடன் எம் வீட்டுக்கு வருவர். அப்பொழுது இரத்தினா ரீச்சர் அன்பும், அழகும் ஆற்றலும் வாய்ந்த ஆசிரியையாகக் காட்சியளித்தார். அவரைப் பற்றிய அன்றைய காட்சியே இன்றும் என்மனதில் நிற்கின்றது.

பின்னர் அவர் வாழ்வில் பல கஷ்டங்கள் குறுக்கிட்டதாக அறிந்தேன். நான் யாழ்ப்பாணக் கல்லூரி அதிபராகப் பொறுப்பேற்ற பின் அவருடைய பிள்ளைகள் நால்வரையும் நன்கு அறிய முடிந்தது. பிள்ளைகளை முன்னேற்றுவது குறித்துப் பேசுவதற்கு அடிக்கடி பாடசாலைக்கு வந்து போவார். ஒரு தாயின் அன்பு, கரிசனை, கண்ணீர், வியர்வை எல்லாவற்றையும் இந்த அம்மையாரிடம் கண்டேன்.

காய்ந்த மரம் கல்லெறிபடுவது இயற்கை. இரத்தினா ரீச்சர் இப்பொழுது மறைந்து விட்டார். ஆனால் பிள்ளைகள் உள்ளங் களிலும் மாணவ மாணவிகள் உள்ளங்களிலும் தொடர்ந்து வாழ்ந்து கொண்டேயிருப்பார்.


**அதி. வண. கலாநிதி. எஸ். ஜெபநேசன்,**
**பேராயர், தென் இந்திய திருச்சபை,**
**வட்டுக்கோட்டை**



தாய் தந்தையுடன் இரத்தினாம்பிகை

# துயர் பகிர்கின்றோம்.

திருமதி. இரத்தினாம்பிகை அருணாசலம் அவர்களின் மறைவு கேட்டு எமது இதய அஞ்சலிகளைச் செலுத்துவதோடு, அவரது பிரிவால் துன்பம் அடைகின்ற அவரது குடும்பத்தினருக்கு எமது பாடசாலை சமூகத்தின் சார்பில் எமது அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

எம்முடன் கல்வி கற்பித்த ஆசிரியர்களில் என் நெஞ்சை விட்டு அகலாத ஆசிரியைகளில் திருமதி. அருணாசலம் அவர்களும் ஒருவராவார். அனுபவம், ஆற்றல், கற்பித்தல் திறன், மொழியாற்றல், கடமை உணர்வு, கீழ்ப்படிவு ஆகிய பண்புகளை ஒருங்கே கொண்ட ஆசிரியை எமக்கெல்லாம் முன்னோடியாக ஒரு வழிகாட்டியாக இருந்து எம்மை வழிப்படுத்தியவர். அவரிடம் இருந்து நாம் கற்ற பாடங்கள் பற்பல. அவை தற்போது எம்மை வழிப்படுத்தி நிற்கின்றன.

கல்வியில் பின்தங்கிய மாணவரை நெறிப்படுத்தி அவர்களைக் கல்வியிலும், பண்பிலும் வழிப்படுத்தி நல்லதொரு மாணவ சமுதாயத்தை உருவாக்குவதில் வெற்றி பெற்றதில் மட்டுமன்றி அவரது காலத்தில் மாணாக்கர்கள் நாட்டிற்கும், சமுதாயத்திற்கும் நல்லவர்களாக வாழ்வதைக் கண்டு மகிழ்ந்தனர்.

அவரது காலத்தில் நாம் ஒருசில ஆண்டுகள் அவருடன் கற்பித்தாலும் எமது பாடசாலைச் சமூகத்தைத் தனது சேவையாலும், நற்பண்பினாலும் ஈர்த்த பெருமை அவரையே சாரும். திரும்பவும் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக் கின்றோம்.

**வி. சிவஞானபோதன்** *(அதிபர்)*
**யா/வட்டு மத்திய கல்லூரி**
**வட்டுக்கோட்டை**

# அனுதாபச் செய்தி

வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி. இரத்தினாம்பிகை இளைப்பாறிய ஆசிரியை அவர்களின் மறைவு பற்றிக் கேள்விப்பட்டதும் மிகவும் கவலை அடைந்தோம். அன்னாரை ஏறத்தாழ 40 ஆண்டுகளுக்கு முன்னரே தெரியும். அன்னார் பொன்னாலை ஸ்ரீ வரதராசப் பெருமாள் வித்தியாசாலையின் ஆங்கில உதவி ஆசிரியையாகப் பணியாற்றத் தொடங்கினார். அப்பாடசாலையில் பல ஆண்டுகள் பணிபுரிந்தார். அப்பொழுது அப்பாடசாலையில் எனது மனைவி மாணவியாகக் கல்வி கற்றார். காலம் சென்றவரிடம் ஆங்கிலக் கல்வியைக் கற்கும் வாய்ப்பினைப் பெற்ற பல மாணவர்கள் எமது கிராமத்தில் உள்ளனர். மாணவர்களுக்கு ஆங்கிலக் கல்வியைச் சிறப்பான முறையில் கற்பித்தவர் என்ற சிறப்பை அமரர் அவர்கள் பெறுகின்றார். அதன் பின்னர் வேறு பல பாடசாலைகளில் பணியாற்றி இளைப்பாறிய அவர் பல காலம் கொழும்பில் நோய்வாய்ப்பட்டு இருந்தார் என நாம் அறிவோம். நல்ல குடும்பத்தைச் சேர்ந்த அவர் தனது கல்விப்பணியை சிறப்பாகச் செய்திருக்கிறார். அவரின் சகோதரர்களையும், உறவினர் களையும் நன்றாக நான் அறிவேன். எல்லோரும் சிறந்த பண்பாளர்களாகவும், கண்ணிய உணர்வுள்ளவர்களாகவும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களின் வழியைப் பின்பற்றி வாழ்ந்தவர் திருமதி. இரத்தினாம்பிகை ஆவார்.

நான் சங்கானையில் உதவி அரசாங்க அதிபராகக் கடமை புரியும் போது, ஏதோ ஒரு உதவிக்காக வந்ததும் அவ்வுதவியைச் செய்து கொடுத்ததும் எனக்கு ஞாபகம் வருகிறது. மறைந்த ஆசிரியையின் பணிகள் எமது கிராம மக்களால் என்றென்றும் மறக்க முடியாத வையாக இருக்கின்றன என்பதையும் அவருக்கு எமது கிராம மக்களின் சார்பிலும், எனது மனைவியின் சார்பிலும், எனது சார்பிலும் அஞ்சலியைச் செலுத்தி, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

திரு. க.ர.சந்திரராசா
இளைப்பாறிய பிரதேச செயலாளர்,
வலி. மேற்கு சங்கானை.

## திருமதி. பத்மினிதேவி அம்பலவாணரும் குடும்பத்தாரும் அனுப்பிய கண்ணீர் அஞ்சலி.

தங்கள் அன்புத் தெய்வமாம் அன்னை மீளாத்துயில் கொண்டதையிட்டு ஆறாத்துயருற்றிருக்கும் பிள்ளைகளாகிய உங்களுக்கு தேறுதல் கூற வார்த்தைகள் இல்லை எனினும் முப்பது ஆண்டுகளுக்கு மேலாக ஒரே கூரையின் கீழ் வாழ்ந்த நாம் பிரிவுத் துயரில் வெதும்பி சில வார்த்தைகளை வடிக்கின்றோம்.

வைகறைப் பொழுதினிலே துயிலெழுந்து தனது கடமைக்கான ஆயத்தங்களைச் செய்யும் சுறுசுறுப்பான கரங்கள், வேகமான நடை, பூரண சந்திரனை ஒத்த பிரகாசமான சாந்தம் தவழும் முகம், அருள் ஒழுகும் பார்வை, தங்கம் போன்ற நிறம், கூரிய நாசி, சுளகு போன்ற செவிகள், மெல்லிய உயரிய தோற்றம், தூய வெளிர் உடை, நெற்றியில் நீறு பார்ப்பவரைக் கவரும் இவரது தோற்றம் என்றும் எம்மனதை விட்டகலா.

கணவனையே கண்கண்ட தெய்வமாகக் கொண்ட அவர், வழி வாழ்ந்த கற்புக்கரசியவர். அடக்கம், அன்பு, பண்பு, ஆளுமை, கடமை, கண்ணியம், கட்டுப்பாடும், எவர்க்கும் தீங்கு நினையாத உள்ளமும் எந்நேரமும் கேட்பவர்க்கெல்லாம் உதவும் கரங்களும் கொண்டவர். எவர்க்கும் எந்நேரத்திலும் அறிவொளி பெருக்கத் தயங்கார்.

எல்லோரும் நன்றாக வாழவேண்டும் என்ற உயரிய சிந்தையும் தனது பிள்ளைகள் மட்டுமல்லாது தன்னைச் சார்ந்துள்ள அனைவரும் பண்புடன் வாழ வேண்டுமென விரும்பிய மனமும், கள்ளங் கபடமற்ற நேரான பேச்சும், வாக்குத் தவறாமையும் நேர்மையும் மிக்க தாயவரை எப்பிறவியில் காண்போமோ?

பிரிவுத் துயரில் துடிக்கும் இவரது செல்வங்களாகிய உங்களுக்கு ஆறுதலை வழங்க வேண்டுமென இறைவனை வேண்டுகின்றோம்.

இவரது ஆத்மா சாந்திபெற வேண்டுமென எல்லாம் வல்ல கருணைக் கடலாகிய கடவுளை வேண்டி நிற்கின்றோம்.

**************

## அன்னையர்க்கு ஆசிரியை
## - ஆசிரியையர்க்கு அன்னை.

அன்பு ஒழுகும் முகம் - அறிவு கமழும் முகம், எளிமை பேணும் இனிமை - இனிமை காணும் எளிமை, நீதியான நோக்கு - நேர்மையான போக்கு, பல்கலை தெரிந்தும் பல்தெரியாப் புன்னகை! இவ்வாறான பல்வேறு இயல்புகளை ஒன்று சேர்த்தால் உருவாகும் தோற்றமே எங்கள் இதயம் வாழ் அமரர் இரத்தினாம்பிகை அவர்கள்!

இவர் எமது அயலூரைச் சார்ந்தவராக இருந்த போதிலும், கொழும்பிலே குடியேற வந்ததிலிருந்து தான் இவரது அறிமுகம் என்க்குக் கிடைத்தது.

வசதிபடைத்த குடும்பத்தில் வாழ்ந்துங்கூட எளிமை போற்றும் இவரது தன்மை கண்டு எனக்குள் வியந்தேன்.

ஓர் அன்னைக்குரிய அத்தனை அருங்குணங்களோடு, ஓர் ஆசிரியைக்கான அனைத்து அம்சங்களும் இணைந்த ஒரு நிறை குடமாகத் திகழ்ந்த இவருடைய மாணவனாகும் வாய்ப்பில்லையே என்பதற்காக நான் ஏங்கியதுண்டு.

தமது நோயின் கொடுமையை விட, அதன் மூலம் ஏனையோர்இடர்ப்படக் கூடாதென்பதில் இவருக்கிருந்த கவனமும் கண்காணிப்பும் என்னைக் கண்கலங்கச் செய்தன.

வியாதிக்குட்பட்டுப் படுக்கையிலிருந்த வேளை இவரது பிள்ளையாக மட்டுமன்றி, ஒரு மருத்துவத் தாதியாகத் தம்மை முழுமையாக அர்ப்பணித்து இவரது புதல்வி, செல்வி உமா ஆற்றிய பணிக்காக மனம் மகிழ்ந்தேன், நெஞ்சம் நெகிழ்ந்தேன். இவ்வாறான ஒரு நிறைவுக்கு ஆதாரமே அன்னை வளர்ப்பின் அத்திவாரம் தான்.!

ஆசிரியர் இரத்தினாம்பிகை என்பது மாறி "அமரர் இரத்தினாம்பிகை" என எழுத வைத்த விதியின் விளையாட்டுக்கு வருந்தாதிருக்க இயலவில்லை.

"கல்விக்கடலிலே கரை சேர்க்கும் தோணி நல்வித்தையால் நண்மை உயர்த்துகின்ற ஏணி பல்கலையும் பேணுகின்ற நடமாடும் வாணி சொல்விருந்தைச் சிந்தையிலே அறைகின்ற ஆணி"

**சோம. திருச்செல்வம்**
**பூரணி,**
**பண்ணாகம்.**

## பேராதனைப் பல்கலைக் கழக வரலாற்றுத்துறைத் தலைவர் பேராசிரியர் எஸ். பத்மநாதன் அவர்களின் இரங்கற் செய்தி.

### அருணாசலம் இரத்தினாம்பிகை

வட்டுக்கோட்டை மேற்கில் அற்கின்சன் வீதியில் வாழ்ந்த அருணாசலம் இரத்தினாம்பிகையின் குடும்பத்தினர் சுற்றத்தவர் என்ற முறையிலும், அயலவர் என்ற காரணத்தாலும் எமக்கு நன்கு அறிமுகமானவர்கள். இரத்தினாம்பிகை முற்காலங்களில் மிகவுஞ் செல்வாக்குடன் வாழ்ந்த குடும்பம் ஒன்றைச் சேர்ந்தவர்.

அவர் கல்வித்தகைமைகளை உரிய காலத்திற் பெற்றதும் போதனாசிரியராக நியமனம் பெற்றார். தொழில் புரியத்தொடங்கிய பின் அவர் அளவெட்டியிற் பிறந்தவரான அருணாசலத்தைத் திருமணஞ் செய்தார். அவர்களுக்குப் பத்மாசனி, பராபரி, கணானந்தன், மயூரன் என்னும் குழந்தைகள் நால்வர் கிடைத்தனர். சாந்த குணசீலரான அருணாசலம் இல்லறத்தின் மேலான பயன் மழலைச் செல்வமே என்று இன்புற்றிருந்த நாட்களிலே சடுதியாக நோய்வாய்ப்பட்டு இவ்வுலகை நீத்தார்.

குழந்தைகள் தாயின் அரவணைப்பிலே வளர வேண்டும் என்பது விதியாகிவிட்டது. நாட்டிலே பொருளாதார நிலையின் சீர்கேடு, அரசியற் கிளர்ச்சிகள், வட பகுதியிலே படைகளின் தேடுதல், ஊர்கள் சுற்றி வளைக்கப்படுதல் போன்றன வாழ்க்கையின் அம்சங்களாகிவிட்டன. இப்படியான சூழ்நிலையில் இரத்தினாம்பிகை ஒரு தாய் என்ற வகையிலே தனது பொறுப்புக்களை போற்றுதற்குரிய வகையிலே நிறைவேற்றினார். ஆங்கில ஆசிரியராக கல்லூரியிற் கடமை புரிந்த அவர் தந்தையினை இழந்த சிறார் நால்வரை பக்குவமாக வளர்ப்பதில் எத்தனை சிரமங்களை எதிர்நோக்கியிருந்தார்? இரத்தினாம்பிகை தனது கடமையை உயிரினும் மேலானதாக ஓம்பியதால் பிள்ளைகள் பருவமடைந்து ஆசார சீலராய் சமூகத்திற் சிறப்புடன் வாழுகின்றனர். பெண்களுக்கு முன் மாதிரியானவர் இரத்தினாம்பிகை. அவருடைய ஆன்மா பார்வதி உடனுறை பரமேசுவரனின் தாழிணையிலே அமைதி பெற்று இன்புற இறைவனை வேண்டுகின்றேன்.

# மருமக்கள் புலம்பல்

காற்றில்லாக் காட்டில் அகப்பட்டோம்
வழிகள் தெரியாது
விழிகள் நனையுண்டோம்
சுழியில் அகப்பட்டு
சுற்றிச் சுழல் பட்டு
அலையில் அகப்பட்டோம்.

இன்னும் பேரவையாய் பெருகி வருகிறதே
எம் நெஞ்சில் பதியுண்ட
உம் பாச நினைவலைகள்
ஊரோடு ஒத்துழைத்தீர்
பேரெடுத்துப் போனீர்
நீர் எடுத்துக் கண்ணீர்
நிரம்பி வழிகிறதே!

மாமி என்றழைக்க நீரில்லை
சாமி அழைக்க நீர்
போய் விட்டீர் யாருமில்லை
பேரெடுத்த தாயே
போகாதே நீயென்று
ஆற்றாமல் துடிதுடித்தோம்
இன்னும் நாம்
ஆறாத சோகத்தில்.....
தேற்ற நீர் இல்லை
திரும்பி வருவீரா?

ஊற்றாய் சுரக்கின்ற
உண்மை ஆண்டவனே!
ஆத்ம சாந்திக்காய்
வேண்டுகிறோம் விரைந்திடுவாய்.

~மருமக்கள்~

ௐ

# ஆத்ம சாந்திப் பிரார்த்தனை

*எண்ணரிய பிறவிதனில் மானிடப் பிறவிதான்*
*யாதினும் அரிது அரிது*
*இப்பிறவி தப்பினால் எப்பிறவி வாய்க்குமோ*
*யாது வருமோ..........*

என்று தாயுமான சுவாமிகள் பாடியுள்ளார். இதற்கொப்ப நீர்வளம் முதலாய நால்வகை வளங்களும் சீர் பெற்று உயர்ந்த சிறிய ஈழநாட்டின் சிகரமெனத் திகழும் யாழ்குடா நாட்டின் வட்டுக்கோட்டையில் பிறந்து வாழ்வாங்கு வாழ்ந்த திருமதி இரத்தினாம்பிகை அருணாச்சலம் அவர்கள் இறைவனடி எய்திய செய்தி கேட்டு மிகவும் அதிர்ச்சியும் துக்கமும் அடைந்தோம். ஆன்ம ஈடேற்றத்தைப் பெற்ற இந்த அம்மையார் வானுறையும் தெய்வத்துள் வைக்கப் படவேண்டியவர். இவன் பிரிவால் துயருறும் பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள் மற்றும் இனத்தவர்கள், நண்பர்கள் யாவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்தனை செய்கின்றோம்.

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

*இங்ஙனம்*
**டாக்டர் சி. சிவசங்கர்**



உ
சிவமயம்

# சைவத்திருமுறைகள்

## விநாயகர் துதி

ஐந்து கரத்தனை யானை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின் றேனே.

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கைதணி விப்பான் - விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாந் தன்மையினாற்
கண்ணிற் பணிமின் கனிந்து.

## தேவாரம்

என்ன புண்ணியஞ் செய்தனை நெஞ்சமே யிருங்கடல் வையத்து
முன்னம் நீபுரி நல்வினைப் பயனிடை முழுமணித் தரளங்கள்
மன்னு காவிரி சூழ்திரு வலஞ்சுழி வாணனை வாயாரப்
பன்னி யாதரித் தேத்தியும் பாடியும் வழிபடும் அதனாலே.

## திருவாசகம்

பால் நினைந் தூட்டுந் தாயினுஞ் சாலப்
பரிந்துநீ பாவியே னுடைய்
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்த மாய
தேனினைச் சொரிந்து புறம்புறந் திரிந்த
செல்வமே சிவபெரு மானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப்பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே! உலப்பிலா வொன்றே!
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே!
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே!
சித்தத்துள் தித்திக்கும் தேனே!
அளிவளர் உள்ளத் தானந்தக் கனியே!
அம்பலம் ஆடரங்காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே.

## திருப்பல்லாண்டு

சீருந் திருவும் பொலியச்
சிவலோக நாயகன் சேவடிக் கீழ்
ஆரும் பெறாத அறிவு
பெற்றேன்; பெற்றதார் பெறுவாருலகில்?
ஊரும் உலகுங் கழற
உளறி உமைமண வாளனுக்காட்
பாரும் விசும்பும் அறியும்
பரிசுநாம் பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

இறவாத இன்ப அன்பு வேண்டிப்பின்
வேண்டு கின்றார்
பிறவாமை வேண்டும் : மீண்டும் பிறப்புண்டேல்
உன்னை என்றும்
மறவாமை வேண்டும் : இன்னும் வேண்டுநான்
மகிழ்ந்து பாடி
"அறவா! நீ ஆடும் போதுன் அடியின் கீழ்
இருக்க" என்றார்.

## திருப்புகழ்

ஏறுமயில் ஏறி விளையாடு முகமொன்றே
ஈசனுடன் ஞானமொழி பேசு முகமொன்றே
கூறுமடியார்கள் வினை தீர்த்தமுகமொன்றே
குன்றுருவ வேல் வாங்கி நின்ற முக மொன்றே
மாறுபடு சூரனை வதைத்த முகமொன்றே
வள்ளியை மணம்புணர வந்த முகமொன்றே
ஆறுமுகமான பொருள் நீயருளல் வேண்டும்
ஆதியருணாசலம் அமர்ந்த பெருமானே.

## முருகன் துதி

காக்கும் கதிரமலைக் கந்தனையே போற்றாமல்
நீர்க்குமிழி போல்வாழ்வை நிலபரமென்றெண்ணி விட்டேன்
இருபுறமும் கரடி புலி யானை இருண்டடைந்த வனந்தனிலே
ஒருவரையுங் காணேனே உச்சியில் சடையிருக்க
உள்ளங் கையில் வேலிருக்க நெற்றியில் நீறிருக்க
நினைத்த வரம் தருவாய்

சூலாயுதங் கொண்டு யமதூதர் வந்தெனைச்
சூழ்ந்து கொண்டால் நான் வேலாயுதா வேலாயுதா
என்று கூப்பிடுவேன் மாளான வள்ளி தெய்வயானையுடன்
மயில் விட்டிறங்கி உன் காலால் நடந்து வரவேண்டுமென்
கந்தப்பனே.

## சரஸ்வதி துதி

வெள்ளைத் தாமரைப் பூவில் இருப்பாள்
வீணை செய்யும் ஒலியில் இருப்பாள்
கொள்ளை யின்பம் குலவு கவிதை
கூறுபாவலர் உள்ளத் திருப்பாள்
உள்ளதாம்பொருள் தேடி யுணர்ந்தே
ஓதும் வேதத்தின் உள்நின் றொளிர்வாள்
கள்ளமற்ற முனிவர்கள் கூறும்
கருணை வாசகத் துட்பொருளாவாள்
(வெள்ளை)

மாதர் தீங்குரற் பாட்டில் இருப்பாள்
மக்கள் பேசும் மழலையில் உள்ளாள்
கீதம் பாடும் குயிலின் குரலைக்
கிளியின் நாவை இருப்பிடங் கொண்டாள்
கோத கன்ற தொழிலுடைத்தாகிக்
குலவு சித்திரம் கோபுரம் கோயில்
ஈதனைத்தின் எழிலிடை யுற்றாள்
இன்பமே வடிவாகிடப் பெற்றாள்

(வெள்ளை)

## காயத்திரி மந்திரம்

ஓம் பூர் புவ ஸ்வா:
தத் ஸவிதுர் வரேண்யம்
பர்கோ தேவஸ்ய தீமஹி
தியோ யோ நப்ரோ சோதயாத்

## வீரபத்திரர்

அக்குமணி மிக்கசெக் கர்ச்சடை யுமுக்கண்ணு மாயிரங் கமல
முகம் அணிமணிக்குண்டலங் குழைகளுங் குலமலையின
கொழுகுகனகபுயமும்
தொக்குயர் படைக்கலக்கைகளும் மார்பிற்றுலங்கு செம்பொன்னாரமும்
சுருதியுங் கருதரியபரிபுர பதங்களுந்தோன்ற
வந்தெனையாளுவாய்
தக்கனொடுமக்கள் மருமக்கள் பக்கத்திலுறை சதுர்முகன் முதல்
வானவர் தங்கள் கருவங்களதிபக்கம் படச்சிவன் தலைமை
நிலையிட்ட முதல்வா
திக்குலவு சோலையுஞ் சாலையும் பாலிற் செறிந்த பிட்டிப்
பதியில்வாழ் சித்திரவலங்கார பத்ரகாளிக்கன்பு திகழ்வீர
பத்ரகுருவே.

## பத்திரகாளி

திருமருவ பரமசங்கர கிருபாகரவரத திரிபுராந்தக பகவனைத்
திடமனத்துடனன் றுவடனத்தினினின்று சேர்ந்துவாதாடியோடி
உருமருவு மண்டல மொடடண்டர் பயில்எண்டிசைகள் உயரண்
டரண்டமுழுதும் உன்னியெழுகோரி மாவீரி சடையன்பாரி
உயரிறீங்காரி சூரி
மருமருவுசடிலதரகாளி கங்காளி சர்வாணி மாதங்கி சூலி
மதமகிடசங்காரி வீரசிங்காரி நெடுவாரி சூழ்பாரினிலவும்,
தருமருவு பிட்டிநகர் உறையுமொருகௌரியே தயவுவைத் தெனை
யாளுவா சத்தியுத்தமி சித்ரமெத்து வித்தகி நித்தியசத்தி பத்திர
காளியே.

## விருத்தம்

அருணாசலவேள மகிழ்துணை ஆசிரியை,
இருமா நிதியாள் ரத்தினாம்பிகை இன்னமுது,
பெருமா வறங்கள் பேணுநல் பெட்பினள்கை,
ஒருமான் ஏந்தி பொற் குஞ்சித பாதம எய்தினளே.

உயிருக்குயிர் ஆகவுள் இருந்தும் உடனிருந்தும்
வெயிற்குள் பொருட்கள் போல் யாவையும் பார்த்தறிந்து
செயிர் தவிர்த் தருளொடு சேர்ப்பவர் செயலை எண்ணா
தயிர்த்த எவன்! ஆக்கினான் அழிப்பா னுரித்தவற்கே.

வினைவழி துன்பொடும் இன்பொடும் வாழ்ந்தவ் வினைக்கேடன
துணைவரப் போமுயிா மீண்டு தோன்றியழி விவதாய்
இறையிணை அடிநிழல் எய்தலே இலட்சியமாய்
மறைதலும் தோன்றலு மான பல ஜென்ம மாண்புளதே.

உடல் பல ஒன்றுயிர் ஆகத்தோன்றி வாழ்ந்து
கெடலுமாம் இயற்கை கண்டும் கவவ்வ தென்னே?
தடவரைத் தையலும் தலைவனும் நடுவிருக்கும்
அடல்பெறும் உயிர்நிலை அறிந்தார்க்கிவ் வியாகூலமே.

உ

சிவமயம்



மாணிக்கவாசக சுவாமிகள்

திருவாசகச் சிறப்பு (திருவாசகம்)

தொல்லை இரும்பிறவிச் சூழுந் தளைநீக்கி
அல்லலறுத் தானந்தம் ஆக்கியதே - எல்லை
மருவா நெறியளிக்கும் வாதவூர் எங்கோன்
திருவா சகம்என்னும் தேன்.

# சிவபுராணம்

*நமச்சிவாய வாழ்க! நாதன்றாள் வாழ்க!*
*இமைப்பொழுது மென்நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க!*
*கோகழி யாண்ட குருமணிதன் தாள்வாழ்க!*
*ஆகம மாகிநின் றண்ணிப்பான் தாள்வாழ்க!*
*ஏகன் அநேகன் இறைவ னடி வாழ்க!*

*வேகங் கெடுத்தாண்ட வேந்தனடி வெல்க!*
*பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க!*
*புறத்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க!*
*கரங்குவிவா ருண்மகிழுங் கோன்கழல்கள் வெல்க!*
*சிரங்குவிவா ரோங்குவிக்கும் சீரோன் கழல்வெல்க!*

*ஈச னடி போற்றி எந்தை யடி போற்றி*
*தேச னடிபோற்றி சிவன்சே வடி போற்றி*
*நேயத்தே நின்ற நிமல னடி போற்றி*
*மாயப் பிறப்பறுக்கும் மன்ன னடிபோற்றி*

சீரார் பெருந்துறைநந் தேவ னடிபோற்றி
ஆராத இன்பம் அருளுமலை போற்றி
சிவனவனென் சிந்தையுள் நின்ற அதனால்
அவனரு ளாலே அவன்றாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுரா ணந்தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய வுரைப்பன்யான்

கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற் கெட்டா எழிலார் கழலிறைஞ்சி
விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறந் தெல்லை இலாதானே நின்பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமா றொன்றறியேன்

புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்மிருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றவித் தாவர சங்கமத்துள்

எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தே னெம்பெருமான்
மெய்யேயுன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்யவென் னுள்ளத்துள் ஓங்கார மாய்நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா வெனவோங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே!

வெய்யாய் தணியாய் இயமான னாம்விமலா
பொய்யா யினவெல்லாம் போயகல வந்தருளி
மெஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞான மில்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானந் தன்னை அகல்விக்கும் நல்லறிவே

ஆக்கம் அளவிறுதி யில்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பா யழிப்பா யருள்தருவாய்
போக்குவா யென்னைப் புகுவிப்பாய் நின்றொழும்பில்

நாற்றத்தி னேரியாய சேயாய் நணியானே
மாற்ற மனங்கழிய நின்ற மறையோனே

கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்களோ ரைந்துடையாய் விண்ணோர்க ளேத்த
மறைந்திருந்தா யெம்பெருமான் வல்வினையேன் தன்னை

மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவ மென்னும் அருங்கயிற்றாற் கட்டிப்
புறந் தோல்போர்த் தெங்கும் புழுவழுக்கு மூடி
மலஞ்சோரு மொன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய

விலங்கு மனத்தால் விமலா வுனக்குக்
கலந்தவன் பாகிக் கசிந்துள் ளுருகும்
நலந்தா னிலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காஅட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்

தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச் சுடரே
தேசனே தேனா ரமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள்புரிந்து நெஞ்சில்வஞ் சங்கெடப்

பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா வமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதா ருள்ளத் தொளிக்கும் ஒளியானே
நீரா யுருக்கியென் னாருயிராய் நின்றானே
இன்பமுந் துன்பமு மில்லானே உள்ளானே

அன்பருக் கன்பனே யாவையுமா யல்லையுமாம்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி யல்லானே
ஈர்த்தென்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்தமெய்ஞ் ஞானத்தாற் கொண்டுணர்வார் தங்கருத்தின
நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே
காக்குமெங் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தாமிக் காய்நின்ற
தோற்றச் சுடரொளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்

மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவே யென் சிந்தனையுள்
ஊற்றான வுண்ணா ரமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பி னுட்கிடப்ப
ஆற்றேனெம் மையா அரனேயோ வென்று

போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பைக் கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடு நாதனே
தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே

அல்லற் பிறவி அறுப்பானே ஓவென்று
சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தி னுள்ளார் சிவனடிக் கீழ்ப்
பல்லோரு மேத்தப் பணிந்து.

திருச்சிற்றம்பலம்

# கௌரி காப்பு படிப்பவை

## விநாயகர் துதி.

முன்னின்று செய்யுள் முறையாம் புனைவதற்கு
என்னின்று அருள் செய் எலிவாகனப் பிள்ளாய்
சொற்குற்றமொரு பொருட்குற்றம் சோர்வு தரும்
எக்குற்றமும் வாராமற் காப்பெடுக்க வந்தேனே கௌரி அம்மாள் தாயாரே
காத்தென்னை தேற்றிடுவாய் காளி மகா தேவியரே
காலமெல்லாம் நின்னரிய காப்பெடுத்தே வாழ்ந்திடுவேன்
எண்ணும் கருமம் இனிதாக முடித்திடுவாய்
பண்ணும் வினையாவும் பனிபோல் போக்கிடுவாய்
உண்ணும் உணவாக உயிருக்கு உயிராக
என்றும் இருந்தே எனைக் காத்து வந்திடுவாய்
காடும்கடந்து வந்தேன் மலையும் கடந்து வந்தேன்
காளி மகா தேவியரே காப்பெனக்கு தந்திடுவாய்
சூலம்கொண்டவளே சுந்தர முகத்தவளே
அரியை உடையவளே அம்மா காளித்தாயே
கொடிய மகிஷா சுரனைக் கூறு போட்டவளே
அசுரம் குலாம் யாவும் அழிக்கும் சுடர் கொடியே
சிவனை நினைத்தல்லோ சீர்விரதம் நீ இருந்தாய்
பரனை நினைத்தல்லோ பதிவிரதம் நீ இருந்தாய்
அரனை நினைத்தல்லோ அம்மா நீ நோன்பு இருந்தாய்
சங்கரனை எண்ணியல்லோ சங்கரி நீ நோன்பு இருந்தாய்
ஐங்கரனை பெற்றவளே அன்று நீ நோன்பு இருந்தாய்
விரதத்தைக் கண்டே விழித்தான் சிவனவனும்
அம்மா உனை அணைத்தே அருள்மாரி பொழிந்தாளே
வகையாற்று படலமிதை வழிவழியாய்க் காட்டிடுவீர்
நெறியறியாத் திகைப்போர்க்கு நெறிமுறையைக் காட்டி
காப்பைப் புனைந்துவிடு கால பயம் ஓட்டிவிடு
நூலப் புனைந்துவிடு நுண்ணிறிவை ஊட்டிவிடு
வல்லமையை தந்துவிடு வையகத்தில் வாழவிடு
காளி மகா தேவியரே காப்பருளும் தேவியரே
நாடு செழிக்கவேன்றே நற்காப்பு அருளுமம்மா
வீடு செழிக்கவென்றே விளைகாப்பு அருளுமம்மா
நல்வாழ்வு வாழ்வதற்கு நறுங்காப்பு அருளுமம்மா
அல்லல் அறுப்பதற்கே அருங்காப்பு அருளுமம்மா
பிள்ளை அற்றவர்க்கு பெருங்காப்பு அருளுமம்மா

பூமணியே மாமணியே புனிதவதி தாயவளே
நாம் விரும்பும் காப்பை நலமுடனே தாருமம்மா
கல்வி சிறப்பதற்கு கலைமகளே வாருமம்மா
செல்வம் சிறப்பதற்கு திருமகளே வாருமம்மா
வீரம் சிறப்பதற்கு வீரசக்தி தாருமம்மா
காட்டுடை தலைவியரே பராசக்தி தாயவளே
ஏட்டுடைத் தேவியரே எல்லாம் மிகு வல்லமையே
காப்பெடுக்க வந்தேனம்மா கனிவுடன் பாருமம்மா
பால் பழங்கள்வெற்றிலைகள் பலவகை திரவியங்கள்
நானுனக்கு தாரேனம்மா நயந்தென்னைக் காருமம்மா
காளி மகா தேவியரே காசினுக்கும் வந்தவளே
விந்தை விதைப்பவளே வினைகாக்கும் காப்பவளே
எந்தால் வாழ்ந்திடுவோம் எல்லாம் உனதருளே
காசினியில் வேற்றுமையை கணப்பொழுதில் மாற்றி விட்டால்
ஏசலின்றி வாழ்ந்திடுவோம் ஏத்து புகழ் தேவியரே
காப்பெனக்கு போட்டு விட்டால் கல்மனது இளகிவிடும்
ஞானம் பெருகி வரும் நல்வாழ்வு மிகுந்து வரும்
தொடர்ந்து அணிவோருக்கு தொட்டதெல்லாம் ஜெயமாகும்
இசைந்து அணிவோருக்கு நினைத்ததெல்லாம் ஈடேறும்
நம்பி அணிவோருக்கு நல்லதெல்லாம் பெருகிவிடும்
நாள்கள் கோள்கள் எல்லாம் நலமுடனே இணைந்துவரும்
சந்தனச் சாந்தவளே சங்கரியே சாந்தினியே
குங்குமப் பூச்சவளே குலக்கொழுந்தே கௌரி அம்மா
காப்பு கட்டிவிட்டு கடமை முடிந்ததென்று
ஏப்பம் மிகவிட்டு என்றுமே இருந்தறியேன்
நாளும் பொழுதிலெல்லாம் நறும் காப்பு கட்டதெனில்
பூவும் நீருமிட்டுப் போற்றி வணங்கிடுவேன்
காலைப்பொழுது எழுந்து காப்பதில் விழித்திடுவேன்
ஞானச்செழுஞ் சுடரே காளியுன்னைக் காணுகின்றேன்
காப்பெனக்கு கையில் உண்டு கடமைகளைச்செய்திடுவேன்
ஏய்ப்பவரைக்கண்டால் ஏரி போல் கனன்றிடுவேன்
தீமை செயலேதும் தெரியாது செய்கையிலே
காப்பு காவலிருந்து கண் திறந்து காட்டுமடி
சொல்லற் கரிதான சோதிமிகு காப்பதனை
இருபத்தொருநாள் வரையில் இசைவொடு விரதம்
பக்தி மனதோடு பரவி அணிவோருக்கு
சித்தி எல்லாம் தருவாள் சீர்பெருகு கௌரி அவள்

முத்திக்கு வழியுமுண்டு முக்கால உணர்வுண்டு
எச்சகத்தில் உள்ளோர்கள் எல்லாம் ஏற்றியெமைப் போற்றிடுவார்
சொற்சக்தி பொருட் சக்தி துலக்கி வந்திடவே
அச்சக்தி எல்லாம் அருள்வாள் கௌரியவள்
கௌரி காப்பதனைக் காலம் தவறாமல்
முறையாய் அணிந்து வர முன்வினைகள நீங்கி வர ஞானம் ஓங்கிவர
நல்லறிவு துலங்கிவர தேவிமகா காளியரே
தெவிட்டாத தீங்கனியே காளியாய் வந்தமர்ந்து
கௌரியே காப்பருளும்.

இப்பூலோகத்தில் கேதார விரதத்தை மனப் பூர்வமாக விரும்பிச் செய்பவர்களுக்குப் பரமேஸ்வரன் சகல செல்வங்களையும் அனுக் கிரகிப்பார்.

அன்பர்கள் இந்த நோன்பைப் பக்தி விநயத்தோடு செய்து சுக ஷேமங்களை அடைந்து மேன்மையாக வாழ்வார்களாக.

சுபம் சுபம் சுபம்.

# பட்டினத்துப் பிள்ளையார் பாடல்

## திரு ஏகம்பம்

*எத்தனைஊர் எத்தனைவீடு எத்தனைதாய் பெற்றவர்கள்*
*எத்தனைபேர் இட்டுஅழைக்க ஏன்என்றேன் - நித்தம்*
*எனக்குக் களை ஆற்றாய் ஏகம்பா கம்பா*
*உனக்குத் திருவிளையாட்டோ*

## திருக்குற்றாலம்

*காலன் வருமுன்னே கண்பஞ் சடைமுன்னே*
*பாலஉண் கடைவாய் படும்முன்னே - மேல்விழுந்தே*
*உற்றார் அழும்முன்னே ஊரார் சூடுமுன்னே*
*குற்றாலந் தானையே கூறு.*

## பொது

*விட்டுவிடப் போகுதுஉயிர் விட்டஉட னேஉடலைச்*
*சுட்டுவிடப் போகின்றார் சுற்றத்தார் - பட்டதுபட்டு*
*எந்நேர மும்சிவனை ஏத்துங்கள் போற்றுங்கள்*
*சொன்னேன் அதுவே சுகம்*

*ஆவியோடு காயம் அழிந்தாலும் மேதினியில்*
*பாவியென்று நாமம் படையாதே - மேவியசீர்*
*வித்தார மும்கடம்பும் வேண்டாம் மடநெஞ்சே*
*செத்தாரைப் போலே திரி.*

*ஒன்பதுவாய்த்தோல்பைக்கு ஒருநாளைப் போலவே*
*அன்புவைத்து நெஞ்சே அலைந்தாயே - வன்கழுக்கள்*
*தத்தித்தக் திச்செட்டை தட்டிக்கட் டிப்பிட்டுக்*
*கத்திக்குத் தித்தின்னக் கண்டு.*

*எத்தனைநாள் கூடி எடுத்த சரீரம்இவை*
*அத்தனையும் மண்தின்பது அல்லவோ - வித்தகனார்*
*காலைப் பிடித்துமெள்ளக் கங்குல்பகல் அற்றஇடம்*
*மேலைக் குடிஇருப்போ மே.*

*எத்தனைபேர் நட்டகுழி எத்தனைபேர் தொட்டமுலை*
*எத்தனைபேர் பற்றி இழுத்தஇதழ் - நித்தநித்தம்*
*பொய்அடா பேசும் புலைமா தரைநீக்கி*
*உய்அடா உய்அடா உய்.*

*இருப்பதுபொய் போவதுமெய் என்றுஎண்ணி நெஞ்சே*
*ஒருத்தருக்கும் தீங்கினைஉன் னாதே - பருத்ததொந்தி*
*நம்மதுஎன்று நாம்இருப்ப நாய்நரிகள் பேய்கழுகு*
*தம்மது என்று தாம்இருக்கும் தான்.*

அன்னையாருக்கு இறுதிக்கடன் இயற்றும் போது பாடியவை

*ஐயிரண்டு திங்களா அங்கம்எலாம் நொந்துபெற்றுப்*
*பையல்என்ற போதே பரிந்து எடுத்துச் - செய்யஇரு*
*கைப்புறத்தில் ஏந்திக் கனகமுலை தந்தாளை*
*எப்பிறப்பில் காண்பேன் இனி.*

*முந்தித் தவம்கிடந்து முந்நூறு நாள் சுமந்தே*
*அந்திபக லாச்சிவனை ஆதரித்துத் - தொந்தி*
*சரியச் சுமந்துபெற்ற தாயார் தமக்கோ*
*எரியத் தழல்மூட்டு வேன்.*

*வட்டிலிலும் தொட்டிலிலும் மார்மேலும் தோள்மேலும்*
*கட்டிலிலும் வைத்துஎன்னைக் காதலித்து - முட்டச்*
*சிறகிலிட்டுக் காப்பாற்றிச் சீராட்டும் தாய்க்கோ*
*விறகிலிட்டுத் தீமூட்டு வேன்.*

*நொந்து சுமந்துபெற்று நோவாமல் ஏந்திமுலை*
*தந்து வளர்த்துஎடுத்துத் தாழாமே - அந்திபகல்*
*கையிலே கொண்டு என்னைக் காப்பாற்றும் தாய்தனக்கோ*
*மெய்யிலே தீமூட்டு வேன்.*

*அரிசியோ நான்இடுவேன் ஆத்தாள் தனக்கு*
*வரிசை இட்டுப் பார்த்து மகிழாமல் - உருசியுள்ள*
*தேனே அமிர்தமே செல்வத் திரவியப்பூ*
*மானே என அழைத்த வாய்க்கு.*

*அள்ளி இடுவது அரிசியோ தாய்தலைமேல்*
*கொள்ளிதனை வைப்பேனோ கூசாமல் - மெள்ள*
*முகமேல் முகம்வைத்து முத்தாடி என்றன்*
*மகனே எனஅழைத்த வாய்க்கு.*

விருத்தம்

முன்னை இட்டதீ முப்பு ரத்திலே
பின்னை இட்டதீ தென்இ லங்கையில்
அன்னை இட்டதீ அடிவ ஸயிற்றிலே
யானும் இட்டதீ மூள்க மூள்கவே.

வெண்பா

*வேகுதே தீஅதனில் வெந்துபொடி சாம்பல்*
*ஆகுதே பாவியேன் ஐயகோ - மாகக்*
*குருவி பறவாமல் கோதாட்டி என்னைக்*
*கருதி வளர்த்துஎடுத்த கை.*

*வெந்தாளோ சோணகிசி வித்தகா நின்பதத்தில்*
*வந்தாளோ என்னை மறந்தாளோ - சந்ததமும்*
*உன்னையே நோக்கி உகந்து வரம்கிடந்தென்*
*தன்னையே ஈன்றுஎடுத்த தாய்.*

*விற்றிருந் தாள் அன்னை வீதி தனில் இருந்தாள்*
*நேற்றுஇருந்தாள் இன்றுவெந்து நீறுஆனாள் - பால்தெளிக்க*
*எல்லீரும் வாருங்கள் ஏதுஎன்று இரங்காமல்*
*எல்லாம் சிவமயமே யாம்*

உடல் கூற்று வண்ணம்
(இசை வாய்ப்பாடு)

தனதனதான தனதனதான
தந்தனந்தன தந்ததனந்த
தனனதனந்த தனனதனந்த
தானனதானன தானனதந்த
தந்ததனதான தனதானனா.

ஒருமடமாதும் ஒருவனும் ஆகி
இன்பசுகம்தரும் அன்புபொருந்தி
உணர்வுகலங்கி ஒழுகியவிந்து
ஊறுசுரோணித மீது கலந்து

பனியில் ஓர்பாதி சிறுதுளிமாது
பண்டியில்வந்துபு குந்துதிரண்டு
பதுமம் அரும்பு கமடம்இதென்று
பார்வைமெய்வாய்செவி கால்கைகள் என்ற

உருவமும்ஆகி உயிர்வளர்மாதம்
ஒன்பதும்ஒன்றும் நிறைந்துமடந்தை
உதரம்அகன்று புவியில்விழுந்து
யோகமும்வாரமும் நாளும் அறிந்து

மகளிர்கள்சேனை தரஅணை ஆடை
மண்படஉந்திஉ தைந்துகவிழ்ந்து
மடமயில் கொங்கை அமுதம் அருந்தி
ஓர் அறிவூர் அறிவு ஆகிவளர்ந்து

ஒளிநகைஊறல் இதழ்மடவாரும்
உவந்துமுகந்திட வந்துதவழந்து
மழியில்இருந்து மழலைமொழிந்து
வாஇருபோஎன நாமம்விளம்ப

உடைமணிஆடை அரைவடம்ஆட
உண்பவர்தின்பவர் தங்களொடு உண்டு
தெருவில்இருந்து புழுதிஅளைந்து
தேடியபாலரொடு ஓடிநடந்து
அஞ்சுவயதாகி விளையாடியே

உயர்தருஞான குருஉபதேச
முந்தமிழின்கலை யும்கரைகண்டு
வளர்பிறைஎன்று பலரும்விளம்ப
வாழ்பதினாறுபி ராயமும்வந்து

மயிர்முடிகோதி அறுபதநீல
வண்டு இமிர்தண்தொடை கொண்டைபுனைந்து
மணிபொன் இலங்கு பணிகள் அணிந்து
மாகதர்போகதர் கூடிவணங்க

மதனசொரூபன் இவன்எனமோக
மங்கையர்கண்டும ருண்டுதிரண்டு
வரிவிழிகொண்டு சுழியஎறிந்து
மாமயில்போல் அவர் போவதுகண்டு

மனதுபொறாமல் அவர்பிறகுஓடி
மங்கலசெங்கல சந்திகழ்கொங்கை
மருவமயங்கி இதழ்அமுதுண்டு
தேடியமாமுதல் சேரவழங்கி

ஒருமுதல்ஆகி முதுபொருளாய்இ
    ருந்ததனங்களும் வம்பில்இழந்து
மதனசுகந்த விதனம்இதுஎன்று
    வாலிபகோலமும் வேறுபிரிந்து

வளமையும்மாறி இளமையுமாறி
    வன்பல்விழுந்துஇரு கண்கள் இருண்டு
வயதுமுதிர்ந்து நரைதிரைவந்து
    வாதவிரோதகு ரோதம் அடைந்து
செங்கையினில் ஓர்த டியும் ஆகியே

வருவது போவது ஒருமுதுகூனு
    மந்திஎனும்படி குந்திநடந்து
மதியும்அழிந்து செவிதிமிர்வந்து
    வாய்அறியாமல்வி டாமல்மொழிந்து

துயில்வரும்நேரம் இருமல்பொறாது
    தொண்டையும்நெஞ்சும் உலர்ந்துவறண்டு
துகிலும்இழந்து சுணையும்அழிந்து
    தோகையர்பாலர்கள் கோரணிகொண்டு

கலியுகம்மீதில் இவர்மரியாதை
    கண்டிடும்என்பவர் சஞ்சலம்மிஞ்ச
கலகலஎன்று மலசலம்வந்து
    கால்வழிமேல்வழி சாரநடந்து

தெளிவும்இராமல் உரைதடுமாறி
    சிந்தையும்நெஞ்சும்உ லைந்துமருண்டு
திடமும் அழிந்து மிகவும்அலைந்து
    தேறிநல்ஆதரவு ஏதுஎனநொந்து

மறையவன்வேதன் எழுதியவாறு
    வந்ததுகண்டமும் என்றுதெளிந்து
இனியென கண்டம் இனிஎனதொந்தம்
    மேதினிவாழ்வுநி லாதினிநின்ற

கடன்முறைபேசும் எனஉரைநாவு
    தங்கிவிழுந்தகைகொண்டுமொழிந்து
கடைவழிகஞ்சி ஒழுகிடவந்து
    பூதமுநாலுசு வாசமும் நின்று
நெஞ்சுதடுமாறி வரும்நேரமே

வளர்பிறைபோல எயிறும்உரோம
முச்சடையும்சிறு குஞ்சியும்விஞ்ச
மனதும்இருண்ட வடிவும்இலங்க
மாமலைபோல்யம தூதர்கள் வந்து

வலைகொடுவீசி உயிர்கொடுபோக
மைந்தரும்வந்துகு னிந்தழிநொந்து
மடியில்விழுந்து மனைவிபுலம்ப
மாழ்கினரே இவர் காலம் அறிந்து

பழையவர்காணும் எனும்அயலார்கள்
பஞ்சுபறந்திட நின்றவர்பந்தர்
இடும்எனவந்து பறையிடமுந்த
வேபிணம்வேக விசாரியும்என்று

பலரையும் ஏவி முதியவர்தாம்
ருந்தசவம்கழு வுஞ்சிலர்என்று
பணிதுகில் தொங்க் களபம்அணிந்து
பாவகமேசெய்து நாறும்உடம்பை

வரிசைகெடாமல் எடும்எனஓடி
வந்துஇளமைந்தர்கு னிந்துசுமந்து
கடுகிநடந்து சுடலை அடைந்து
மானிடவாழ்வென வாழ்வெனநொந்து

விறகுஇடைமூடி அழல்பொடுபோட
வெந்துவிழுந்தும றிந்துநிணங்கள்
உருகிஎலும்பு கருகிஅடங்கி
ஓர்பிடிநீறும்இ லாத உடம்பை
நம்பும்அடியேனை இனிஆளுமே.



## நன்றி நவில்கின்றோம்

எமது அன்புத் தெய்வமாம் அன்னை இறை பதம் அடைந்த செய்தி கேட்டு அவருடைய இறுதிக்கிரியையில் பங்குபற்றியவர்களுக்கும் அதற்கு வேண்டிய ஒத்துழைப்பு நல்கியோ ருக்கும் மற்றும் பல வழிகளிலும் உதவியோ ருக்கும் இன்று நடைபெற்ற கிரியைகளிலும் ஆன்ம சாந்திப் பிரார்த்தனையிலும் பங்கு பற்றியோருக்கும் தொலைபேசி, தந்தி, தபால் மூலம் அனுதாபம் தெரிவித்த அன்பர்கள் அனைவருக்கும் எமது இதயம் கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நன்றி

இங்ஙனம்
பிள்ளைகள்,
மருமக்கள்
பேரப்பிள்ளைகள்,
சகோதரன்



Print Graphics, No. 289 1/2, Galle Road, Colombo 06. Tel: 596312.